# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 14,514—1965 සැප්තැම්බර් 25 වැනි සෙනසුරාදා – 1965.9.25

14,514 ம் இலக்கம்—1965 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 25 திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## விலைக்கட்டளைகள்

உணவு விலைக்கட்டளை இலக்கம் எம்எல்/1965/4. **உபஉணவுப் பொருள்கள்.**

### விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

**கட்டளை**

(173 ம் அத்தியாயமான) விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3 (2) ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 4 ம் பிரிவினால் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக்கொண்டு மாத்தளை பரிபாலன மாவட்டத்துப் பிரதி விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி (உணவு) விக்டர் சந்திரதிலக்க பண்டார உணன்தென்ன ஆகிய நான் இக்கட்டளையால்—

(1) 1965 ம் ஆண்டு ஏப்ரில் மாதம் 17 ந் திகதி வெளியான 14,378 ம் இலக்க அதிவிசேட அரசாங்க வர்த்தமானியில் பிரசுரமான 1965 ம் ஆண்டு ஏப்ரில் மாதம் 9 ம் திகதியைக் கொண்ட எம்எல். 1965/1 இலக்க விலைக்கட்டளையை இப்போதிருந்தே உடனடியாக நீக்கிவிடுகிறேன் ;

(2) (173 ம் அத்தியாயமான) விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரகாரம் கொழும்பு மாநகர எல்லைக்குள் மொத்த வியாபாரிகளின் உச்ச மொத்த விலையாக இப்போதைக்கென விதிக்கப்பட்ட விலையுடன் இதற்குள்ள அட்டவணையின் 3 ம் பந்தியில் குறிக்கப்பட்ட தொகை கூட்டப்பட்ட விலையே அவ் அட்டவணையின் 2 ம் பந்தியில் விவரிக்கப்பட்ட இடப்பரப்புகளில் அல்லது நிர்வாக மாவட்டங்களில் 1 ம் பந்தியில் முறையே விபரிக்கப்பட்ட பொருள்களின் அதற்குக்கூடிய விலைக்கு விற்றலாகாத மொத்த அந்தரின உடனேயே நடைமுறையாகும் மொத்த விலையாக விதிக்கிறேன் ;

(3) (173 ம் அத்தியாயமான) விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரகாரம் கொழும்பு மாநகர எல்லைக்குள் சில்லறை வியாபாரிகளின் உச்சச் சில்லறை விலையாக இப்போதைக்கென விதிக்கப்பட்ட விலையுடன் 4 ம் பந்தியிற் குறிக்கப்பட்ட தொகையைக்கூடிய விலையையே குறித்த அட்டவணையின் நேரொத்த 1 ம் பந்தியின் சொல்லப்பட்ட பொருள்களின் அவ்வட்டவணையின் 2 ம் பந்தியிற் குறிக்கப்பட்ட இடப்பரப்பினுள்ள அல்லது மாவட்ட எல்லைக்குள் அதற்குக்கூடிய விலைக்கு விற்றலாகாத நிகர இருத்தல் ஒன்றின் ஆகக்கூடிய சில்லறை விலையாக உடனடியாக நடைமுறையில் வரும்படி விதிக்கிறேன் ;

(4) இக்கட்டளையின் நோக்கத்திற்காக—

(அ) குறித்த அட்டவணையின் 1 ம் பந்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளின் எத்தொகையையாவது திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது குறித்த அட்டவணையின் 1 ம் பந்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளை ஒரு மொத்த அந்தர் தொகையில் அல்லது அதற்குக்கூடிய தொகையில் ஒரு தடவையில் விற்றல் மொத்த விற்பனையாகுமெனவும்,

(ஆ) குறித்த அட்டவணையின் 1 ம் பந்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளின் மொத்த அந்தருக்குக் குறைந்த எத்தொகையாவது பாவிப்புக்கு அல்லது உபயோகத்திற்காக விற்றல் சில்லறை விற்பனையாகுமெனவும் ஆஞ்ஞையிடுகிறேன ;

(5) குறித்த அட்டவணையின் 1 ம் பந்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளையேனும் வேறொரு பொருளோடு கலந்து இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள எந்த ஒரு இடத்திலும் எவராவது விற்றலாகாது என ஆஞ்ஞையிடுகிறேன் ;

(6) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் குறித்த அட்டவணையின் 1 ம் பந்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளையேனும் தம்வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது, வாகனத்திலாவது, வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் தகுந்த ஒரு கொள்கலத்தில் குறிப்பிட்ட ஒரு பொருளின் சிறு தொகையையும், இக்கட்டளையால் அப்பொருளுக்கு விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகளையும் ஒரு அங்குல உயரத்திற்குக் குறையாத எண்களில் விலை அட்டைகளில் அல்லது பலகைகளில் எழுதி அப்பொருளும் ஆகக்கூடிய விலையும் வாங்குவோரால் நன்றாகப் பார்க்கக்கூடியவாறு அக்கொள்கலத்தில் இணைத்து பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(7) இக்கட்டளையின் நோக்கத்திற்காக "இருத்தல்" அல்லது "இரு." என்பது அவ்வோடுபோஸ் எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் நிறையாகக் கருதப்படுமென்று ஆஞ்ஞையிடுகிறேன் ;

(8) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் குறித்த அட்டவணையின் 1 ம், 2 ம் பந்தியில் விபரிக்கப்பட்ட பொருள் எதனையும் மொத்தமாக விற்கும் ஒவ்வொருவரும் குறித்த அட்டவணையின் 1 ம் பந்தியில் விபரிக்கப்பட்ட ஏதாவதொரு பொருளைச் சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்கு பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச்சீட்டொன்று கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த தேதி ;

(ஆ) விற்ற பொருளின் தொகை (நிறை) ;

(இ) விற்ற தொகைக்கு கொடுத்த விலை ;

(ஈ) எவ்வித விற்பனை, அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா என்பது.

(9) குறித்த அட்டவணையின் 1 ம் பந்தியில் விபரிக்கப்பட்ட ஏதாவதொரு பொருள் விற்கப்படுமிடத்து அட்டவணையின் 3 ம், 4 ம் பந்திகளிற் குறிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய விலைகளுள் அவ்வாறு விற்கப்படும் பொருளைச் சுற்றிக்கொடுக்கும் உறை அல்லது வைத்துக்கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையும் அடங்க வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

1965 ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 22 ந் தேதி முற்பகல் 10 மணிக்கு மாத்தளையில் கையொப்பமிடப்பட்டது.

வீ. சீ. பீ. உணன்தென்ன,
பிரதி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
மாத்தளை மாவட்டம்.

அட்டவணை

| பந்தி 1 | பந்தி 2 | பந்தி 3 | பந்தி 4 |
|---|---|---|---|
| பொருளின் விபரம் | பரிபாலன மாவட்டத்தின் இடப்பரப்பு | கொழும்பு மாநகர எல்லைக் குட்பட்ட மொத்த வியாபாரி களின் மொத்த அந்தர் ஒன்றுக்குக் கூட்டவேண்டிய விலை ரூ. ச. | கொழும்பு மாநகர எல்லைக் குட்பட்ட சில்லறை வியாபாரி களின் இருத்தல் ஒன்றுக்கு கூட்ட வேண்டிய விலை ரூ. ச. |
| வெங்காயம் (ஈரவெங்காயம் சிக் பெல்லாப்பூர் தவிர்ந்த இதர ரகங் கள்) உருளைக்கிழங்கு சிறுவெங்காயம் | கூம்பியாங்கொட, கொட்டுவேகெதற, அனுவிகார தவிர்ந்த மாத்தளை மாநகரசபை எல்லை | 2 55 | 0 2 |
| ,, | 2. (அ) மாத்தளை மாநகரசபை எல்லை, ஒவிலிகந்த பரநாகன்தென்ன தவிர்ந்த மாத்தளை காரியாதி காரியின் பகுதி | | |
| ,, | (ஆ) வெகிஹல, பொல்வத்தகந்த, வெலங்கஹ வத்த, அம்பன்கங்க கோறளே, தவிர்ந்த ரத்தோட்டை காரியாதிகாரியின் பகுதி | 2 95 | 0 3 |
| ,, | (இ) கூம்பியாங்கொட, கொட்டுவேகெதற, அனு விகார, மாத்தளை மாநகரசபை எல்லைக்குள்ளிருக் கும் | | |
| ,, | ..3. (அ) தம்புள்ள காரியாதிகாரியின் பகுதி. (ஆ) கலேவெல காரியாதிகாரியின் பகுதி. (இ) அம்பன் கங்க கோறளே (பகுதி), வெஹிகல, ரத்தோட்டை காரியாதிகாரியின் பகுதி, பொல்வத்தகந்த, வெலங்கஹ வத்தை. (ஈ) அம்பன்கங்க கோறளே (பகுதி) தம்புள்ள காரியாதிகாரியின் பகுதி. (உ) பரநாகன்தென்ன, ஒவிலிகந்த, மாத்தளை காரி யாதிகாரியின் பகுதி | 3 35 | 0 4 |
| ,, | ..4. லக்கல காரியாதிகாரியின் பகுதி | 3 95 | 0 5 |
| கொத்தமல்லி, முழு உழுந்து, பாசிப்பயறு, துவரம்பருப்பு, கடலைப்பருப்பு, புளி | 1. கூம்பியாங்கொட, கொட்டுவேகெதற, அனு விகார தவிர்ந்த மாத்தளை மாநகரசபை எல்லை | 3 55 | 0 3 |
| ,, | ..2. (அ) மாத்தளை மாநகரசபை எல்லை, ஒவிலி கந்த, பரநாகன்தென்ன தவிர்ந்த மாத்தளை காரியாதிகாரியின் பகுதி | | |
| ,, | .. (ஆ) வெகிஹல, பொல்வத்தகந்த, வெலங்கஹ வத்த, அம்பன்கங்க கோறளே, தவிர்ந்த ரத் தோட்டை காரியாதிகாரியின் பகுதி | 3 95 | 0 4 |
| ,, | .. (இ) கூம்பியாங்கொட, கொட்டுவேகெதற, அனு விகார மாத்தளை மாநகரசபை எல்லைக்குள்ளிருக் கும் | | |
| ,, | ..3. (அ) தம்புள்ள காரியாதிகாரியின் பகுதி, (ஆ) கலேவெல காரியாதிகாரியின் பகுதி, (இ) அம் பன்கங்க கோறளே, பகுதி, வெகிஹல, ரத்தோட் டை காரியாதிகாரியின் பகுதி, பொல்வத்தகந்த, வெலங்கஹவத்த, (ஈ) அம்பன்கங்க கோறளே, (பகுதி) தம்புள்ள காரியாதிகாரியின் பகுதி, (உ) பரநாகன்தென்ன, ஒவிலிகந்த, மாத்தளை காரி யாதிகாரியின் பகுதி | 4 35 | 0 5 |
| ,, | ..4. லக்கல காரியாதிகாரியின் பகுதி | 4 95 | 0 6 |

**குறிப்பு.**—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருட்களை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகளல்ல ; இவை ஆகக்கூடிய விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருட்களை விற்றலாகாது.

9-1149

விலைக்கட்டளை இலக்கம் எம். ஓ. என்.எ/டி/21/1965 — உப உணவுப் பொருள்கள்.

## விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

(173 ம் அத்தியாயமான) விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3 (2) ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 4 ம் பிரிவினால் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக்கொண்டு மொனருகலை மாவட்டத்துப் பிரதி விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி (உணவு) ஆகிய மஹாதந்திரிகே விமலானந்த அமரசேகர ஆகிய நான் இக்கட்டளையால் :

( i ) 1964 ம் ஆண்டு மார்கழி மாதம் 4 ம் திகதி வெளியான 14,248 ம் இலக்க அதிவிசேட கசற்றில் பிரசுரமான 1964 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 26 ம் திகதியைக் கொண்ட எம்.ஓ.என்.எ/டி/20/1964 இலக்க விலைக்கட்டளையை இப்போதிருந்தே உடனடியாக நீக்கிவிடுகிறேன்;

( ii ) (173 ம் அத்தியாயமான) விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரகாரம் கொழும்பு மாநகர எல்லைக்குள் மொத்த வியாபாரிகளின் உச்ச மொத்த விலையாக இப்போதைக்கென விதிக்கப்பட்ட விலையுடன் இதற்குள்ள 1 ம் அட்டவணையின் 3 ம் பத்தியில் குறிக்கப்பட்ட தொகை கூட்டப்பட்ட விலையே 2 ம் அட்டவணையுடன் சேர்த்து வாசிக்கப்படும் அட்டவணையின் 2 ம் பத்தியில் விஸ்தரிக்கப்பட்ட இடப்பரப்புகளில் 1 ம் பத்தியில் முறையே விபரிக்கப்பட்ட பொருள்களின் அதற்குக்கூடிய விலைக்கு விற்றலாகாத மொத்த அந்தரின் உடனேயே நடைமுறையாகும் மொத்த விலையாக விதிக்கிறேன்;

( iii ) (173 ம் அத்தியாயமான) விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரகாரம் கொழும்பு மாநகர எல்லைக்குள் சில்லறை வியாபாரிகளின் உச்சச் சில்லறை விலையாக இப்போதைக்கென்க் குறிப்பிட்ட விலையுடன் 1 ம் அட்டவணையின் 4 ம் பத்தியில் குறிக்கப்பட்ட தொகையைக் கூட்டிய விலையையே குறித்த அட்டவணையின் நேரொத்த 1 ம் பத்தியில் சொல்லப்பட்ட பொருள்களின் 2 ம் அட்டவணையுடன் சேர்த்து வாசிக்கப்படும் அவ்வட்டவணையின் 2 ம் பத்தியிற் குறிப்பிடப்பட்ட இடப்பரப்புகளில் அதற்குக்கூடிய விலைக்கு விற்றலாகாத நிகர இருத்தல் ஒன்றின் ஆகக்கூடிய சில்லறை விலையாக உடனடியாக நடைமுறையில் வரும்படி விதிக்கிறேன்;

( iv ) இக்கட்டளையின் நோக்கத்திற்காக,—

(அ) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளின் எத்தொகையையாவது திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளை ஒரு மொத்த அந்தர் தொகையில் அல்லது அதற்குக்கூடிய தொகையில் ஒரு தடவையில் விற்றல் மொத்த விற்பனையாகுமெனவும்,

(ஆ) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளின் மொத்த அந்தருக்குக் குறைந்த எத்தொகையையாவது பாவிப்பதற்கு அல்லது உபயோகத்திற்காக விற்றல் சில்லறை விற்பனையாகும் எனவும் ஆஞ்ஞையிடுகிறேன்;

( v ) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளையேனும் வேறொரு பொருளோடு கலந்து இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள எந்த ஒரு இடத்திலும் எவராவது விற்றலாகாது என ஆஞ்ஞையிடுகிறேன்;

( vi ) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளையேனும் தம்வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில், எவ்விடத்திலாவது, வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் தகுந்த ஒரு கொள்கலத்தில் குறிப்பிட்ட ஒரு பொருளின் சிறு தொகையையும், இக்கட்டளையால் அப்பொருளுக்கு விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகளையும் ஒரு அங்குல உயரத்திற்குக் குறையாத எண்களில் விலை அட்டைகளில் அல்லது பலகைகளில் எழுதி அப்பொருளும் ஆகக்கூடிய விலையும் வாங்குபவரால் நன்றாகப் பார்க்கக்கூடியவாறு அக்கொள்கலத்தில் இணைத்து பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்;

( vii ) இக்கட்டளையின் நோகத்திற்காக " இருத்தல் " அல்லது " இரு. " என்பது " அவோர்டுபோஸ் " எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் நிறையாகக் கருதப்படுமென்று ஆஞ்ஞையிடுகிறேன்;

( viii ) இக்கட்டளையால் ஆக்கூடிய விலைகள் விதிகப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் குறித்த அட்டவணையின் 1 ம் 2 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட பொருள் எதனையும் மொத்தமாக விற்கும் ஒவ்வொருவரும் குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிகப்பட்ட ஏதாவதொரு பொருளைச் சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச் சீட்டொன்று கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்

(அ) விற்பனை நடந்த தேதி,

(ஆ) விற்ற பொருளின் தொகை (நிறையில்) ,

(இ) விற்ற தொகைக்கு கொடுத்த விலை ,

(ஈ) எவ்வித விற்பனை, அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா என்பது;

( ix ) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஏதாவதொரு பொருள் விற்கப்படுமிடத்து அட்டவணையின் 3 ம், 4 ம் பத்திகளிற் குறிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய விலைகளுள் அவ்வாறு விற்கப்படும் பொருளைச் சுற்றிக் கொடுக்கும் உறை அல்லது வைத்துக் கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையும் அடங்கவேண்டும் என ஆஞ்ஞையிடுகிறேன்.

1965 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 15 ந் தேதி மு. ப. 10 மணிக்கு கச்சேரி, மொனருகலையில் கையொப்பமிடப்பட்டது.

எம். ரி. டபிள்யு. அமரசேகர,
பிரதி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
மொனருகலை மாவட்டம்.

அட்டவணை இல. 1

| பத்தி 1<br>பொருள் | பத்தி 2<br>இடப்பரப்பு | பத்தி 3<br>மொத்த அந்தர் ஒன்றிற்கு கொழும்பு முனிசிபல் எல்லைக்குள் நியமிக்கப்பட்ட ஆகக்கூடிய விலையுடன் கூட்டப்பட வேண்டிய தொகை<br>ரூ. ச. | பத்தி 4<br>சில்லறை இருத்தல் ஒன்றிற்கு கொழும்பு முனிசிபல் எல்லைக்குள் நியமிக்கப்பட்ட ஆகக்கூடிய விலையுடன் கூட்டப்பட வேண்டிய தொகை<br>ரூ. ச. |
|---|---|---|---|
| வெண்காயம் (ஈரவெண்காயம் சிக்பெலாப்பூரும் தவிர்ந்த ஏனைய எல்லா ரகமும்) | இடப்பரப்பு இல. 1 | 2 40 | 0 3 |
| ஷை | இடப்பரப்பு இல. 2 | 2 50 | 0 4 |
| ஷை | இடப்பரப்பு இல. 3 | 2 70 | 0 5 |
| கொத்தமல்லி | இடப்பரப்பு இல. 1 | 3 40 | 0 4 |
| கொத்தமல்லி | இடப்பரப்பு இல. 2 | 3 50 | 0 5 |
| கொத்தமல்லி | இடப்பரப்பு இல. 3 | 3 70 | 0 6 |
| முழு உழுந்து | இடப்பரப்பு இல. 1 | 3 40 | 0 4 |
| முழு உழுந்து | இடப்பரப்பு இல. 2 | 3 50 | 0 5 |
| முழு உழுந்து | இடப்பரப்பு இல. 3 | 3 70 | 0 6 |
| பாசிப்பயறு | இடப்பரப்பு இல. 1 | 3 40 | 0 4 |
| பாசிப்பயறு | இடப்பரப்பு இல. 2 | 3 50 | 0 5 |
| பாசிப்பயறு | இடப்பரப்பு இல. 3 | 3 70 | 0 6 |
| துவரம் பருப்பு | இடப்பரப்பு இல. 1 | 3 40 | 0 4 |
| துவரம் பருப்பு | இடப்பரப்பு இல. 2 | 3 50 | 0 5 |
| துவரம் பருப்பு | இடப்பரப்பு இல. 3 | 3 70 | 0 6 |
| கடலைப் பருப்பு | இடப்பரப்பு இல. 1 | 3 40 | 0 4 |
| கடலைப் பருப்பு | இடப்பரப்பு இல. 2 | 3 50 | 0 5 |
| கடலைப் பருப்பு | இடப்பரப்பு இல. 3 | 3 70 | 0 6 |
| புளி | இடப்பரப்பு இல. 1 | 3 40 | 0 4 |
| புளி | இடப்பரப்பு இல. 2 | 3 50 | 0 5 |
| புளி | இடப்பரப்பு இல. 3 | 3 70 | 0 6 |
| உருளைக்கிழங்கு | இடப்பரப்பு இல. 1 | 2 40 | 0 3 |
| உருளைக்கிழங்கு | இடப்பரப்பு இல. 2 | 2 50 | 0 4 |
| உருளைக்கிழங்கு | இடப்பரப்பு இல. 3 | 2 70 | 0 5 |
| ஈரவெண்காயம் | இடப்பரப்பு இல. 1 | 3 40 | 0 4 |
| ஈரவெண்காயம் | இடப்பரப்பு இல. 2 | 3 50 | 0 5 |
| ஈரவெண்காயம் | இடப்பரப்பு இல. 3 | 3 70 | 0 6 |
| சக்கரை | இடப்பரப்பு இல. 1 | 3 40 | 0 4 |
| சக்கரை | இடப்பரப்பு இல. 2 | 3 50 | 0 5 |
| சக்கரை | இடப்பரப்பு இல. 3 | 3 70 | 0 6 |

**குறிப்பு.**—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருள்களை விற்பதற்கென விதிக்கப்பட்ட விலைகள் அல்ல, இவை **ஆகக்கூடிய** விலைகளாகும். இதற்கு மேலாக இப்பொருள்களை விற்றலாகாது.

அட்டவணை இல. 2

இடப்பரப்பு இல. 1.—வெள்ளவாயப் பட்டினம், பிபிலைப் பட்டினம் மொனருகலைப் பட்டினம் புத்தளைப் பட்டினம், படல்கும்புற கடைவீதி.

இடப்பரப்பு இல. 2.—வெள்ளவாயா கிராம சபை இடப்பரப்பில் வெள்ளவாய பட்டினம் தவிர, வகம்பத்து நில்கல கிராம சபை இடப்பரப்பில். பிபிலைப் பட்டினம் தவிர, புத்தளை கிராம சபை இடபரப்பில் புத்தளை பட்டினம் தவிர , கந்துகர கிராம சபை இடப்பரப்பில் படல்கும்புற கடைவீதி தவிர.

இடப்பரப்பு இல. 3.—தம்பகல்ல கிராம சபை இடப்பரப்பு, புத்தளை வெதிறட்ட கிராமசபை இடப்பரப்பில் மொனருகலை பட்டினம் தவிர, சித்தறம் பலாத்த கிராம சபை இடப்பரப்பு, மொனருகலை மாவட்ட பரிபாலனத்துள் அடங்கும் விந்தனைப் பற்றுப்பகுதியும்.

9—1150.

இலங்கை வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனுல் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.